
# முகவரிகளை நோக்கி...



## விஞ்ஞான பீடம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவரிகளை நோக்கி

## 1986 - 1989

விஞ்ஞானபீட மாணவர்கள்

**We are going**

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Wishes

For a Bright Future

From :

# POOBALASHINGAM BOOK DEPOT

**Hospital Rd., JAFFNA**

With best compliments from

## K. K. A. KANDIAH PILLAI

Importer, Exporter
&
General Merchant

**316, Hospital Rd, &
26, Wyman Rd.,
JAFFNA.**

Phone: 22311
Grams: 'Murugan'

With best compliments from

## K. Sivapragasam & Sons

General merchants,
Commission Agents
&
Groceries

**No. 312, Hospital Rd.,
JAFFNA.**

Phone : 22450

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுழைவாசல்.....

மாறுபடுகின்ற மனித நாகரீகம், மனித உறவுகள் என்பன புதிய பரிமாணங்களை அதி வேகமாக அடைந்து கொண்டிருக்கின்ற 20ம் நூற்றுண்டின் இறுதித் தசாப்பத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற மனிதக் கூட்டத்தின் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியாக மாணவர்கள் கருதப்படுகிறுர்கள். அதிலும் பல்கலைக்கழக மாணவர்களதும் அவர்களது சமூகத்திலுள்ள நிலையும் சமூகபபங்கும் இந்த சமுதாயத்தால் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் பல்கலைக்கழகப் படிப்பை முடித்துக் கொண்டு சமூகத்தில் காலடி எடுத்து வைப்பதற்காக தயாராகிக் கொண்டிருக்கும் நாமும் எமது அனுபவப் பகிர்வுகளை வெளிப்படுத்திக் கொள்கின்ற ஒரு களமாக உங்கள் கைகளில் தவழ்கின்ற இந்நூல் அமைய வேண்டுமென எதிர்பார்க்கிறேம்.

இந்த வளாகத்து வாழ்க்கையில் பல வித்தியாசமான குணங்களையுடைய, பழக்கவழக்கங்களையுடைய, அனுபவங்களையுடைய பலரோடு பழகியிருக்கிறேம். பல சந்தர்ப்பங்களில் சகிப்புத் தன்மையும், விட்டுக்கொடுப்புகளும் எம்முடைய கூட்டு வாழ்க்கையை உறுதிப்படுத்தியிருக்கின்றன. சகோதரத்துவத்தை பலப்படுத்தியிருக்கின்றன. மகிழ்ச்சி, சந்தோஷம் என்பவற்றை மனிதத்துவத்தோடு கலந்த பல நிலைகளில் நாம் பார்த்திருக்கிறேம். உரிமைக்காக உயிரைக் கூட கொடுக்கத் துணிந்திருக்கிறேம்! பறவைகள் போல உல்லாசித்திருக்கிறேம். சமூகத்தின் ஏனைய பகுதியினரைவிட எமக்கிருக்கின்ற சுதந்திரத்தன்மை, தனித்துவம் என்பன எமது வாழ்நிலையை ஒரு புதிய வளர்ச்சியடைந்த நிலைக்கு மாற்றியமைந்திருக்கிறது! புதிய அனுபவங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இவ்வாறுன ஒரு நிலையில் எமது பிரிதல் பற்றிய செய்தி குறித்து துயர் அடையாத யாரும் இருக்க முடியாது,

மேலும் எதிர்கால எமது வாழ்க்கை பற்றிய கேள்விகளும் சமூகத்தில் பட்டதாரிகளாக அனுதரவாக விடுபடப் போகின்ற எமது நிலையும் எமது வளாக வாழ்க்கையின் மகிழ்வுகளோடு ஒப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்டுப் பார்க்கும்போது இருள் சூழ்ந்தாக அமைகிறது. நாளை நாங்கள் என்ன செய்யப் போகிறோம் என்ற ஏக்கம் எல்லோர் மனதிலும் இயல்பாகவே தோன்றி மறைகிறது. இந்த நிலையில் எமது பிரிதலின் துயர் இரட்டிப்பாகிறது.

மனிதனுடைய உணர்வுகளை அவனுடைய சமூக வாழ்நிலையே தீர்மானிக்கிறது என்பது ஒரு மிகப்பெரிய உண்மை! இந்த நிலையில் ஒவ்வொரு மனிதனுடைய தவறுகளும் அவனுடைய சமூக வாழ்நிலை குறித்தே அமைகிறது. எனவே தவறுகளுக்காக தனி மனிதர்கள் மீது ஆத்திரமடைதல் என்பது மகா தவறு! எம்மத்தியிலுள்ள மனிதர்களது தவறுகள், சிறு சிறு பிரச்சனைகள் கூட இந்த இறுதி வருடத்தில் இல்லாமல் போய்விட்டதும், எம்மிடையேயான கூட்டுவாழ்க்கை புதிய இறுக்கத்தை அடைந்திருப்பதும், நாம் இந்த உண்மையை அனுபவ பூர்வமாக உணர்ந்துள்ளமையே குறிக்கின்றது! ஒற்றுமையாக ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்களின் பிரிதலைப்போல் சோகம் படர்ந்த முகங்களோடு வளாகத்தை விட்டு பிரிந்து செல்கிறோம்.

எமது நினைவுப் பதிவுகளை இந்த வளாகத்தில் விட்டுச் செல்கிறோம். எமது இந்த நூல் அதன் பணியினை இந்த வகையில் செய்து முடிக்கும் என நம்புகிறோம்! வழமையான 'முகவரிகளை நோக்கி' நூலைவிட சற்று வித்தியாசமாக அமைக்க முனைந்துள்ளோம். வழமையான விடயங்கள் தவிர சில புதிய சமூக விழுமியங்களையும் தொட்டுக்காட்ட முனைந்துள்ளோம்.

சிரமங்கள் வழமை போல!

விளம்பரதாரர்களுக்கும் அச்சகத்தாருக்கும் நன்றிகள்! ஒத்துழைத்த அனைவருக்கும் ஆசிரியர் குழு, விஞ்ஞானபீட 3ம் வருட மாணவர்கள் சார்பாக நன்றியைத் தெரிவிக்கிறது.

நாவலன்
(ஆசிரியர் குழு சார்பில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்கப்படாத முகவரிகளே! முகவுரைகள்....!

( Bio S )

கல்வயல் அருட்செல்வன் — காதல், கடமை, கல்வி என
எதிலும் சளைக்காத எங்கள் தலைவன்
உசன் வாழ் விஜயதாசன் உரக்கக் குரலெழுப்பி,
உழைத்துழைத்தே படிக்கும் தீரன்
பத்துநிமிடம் படடா என பரவசப்படுத்திய பாஸ்கரன்.
முழுதாக எதையும் அறியத்துடிப்பவன்
மூவரும் இணைந்து நின்றால் திக்கெட்டும் கிளம்பும் சிரிப்பு!

வன்மருங்குல் கொண்ட மிக நல்ல நந்தினி (S)
கல்வியே கருத்தான, கலகலப்பான, பாங்கான நந்தினி (K)
கண்ணியம் தவறாத கட்டிளங் காரிகை
இன்முகம் காட்டி உரையாடும் ரஞ்சினி
இளமை, இனிமை, கனிமை, கலந்த கட்டழகி
கூடியே திரியும் குணவதி, விழியழகி, அனுராதை
நால்வரும் புறப்பட்டால் நடைபாதை அம்போ தான் r

மௌனமே மொழியான மங்கை கௌரீஸ்வரி
மல்லுக்கு செல்வதுபோல் நடக்கின்ற அருள்நிதி.
இடைக்காடுதந்த இடையில்லா அழகி நாகேஸ்வரி
நலுங்காமல் நடக்கின்ற நடையழகி நாமகள்
அடக்கமே உருவான பரித்தித்துறை வசந்தா
அமைதியான அவள் சிரிப்பு எமக்கெல்லாம் இனிப்பு!

பளை தந்த மாவீரன் பத்மநாதன். காளையர் தலைவன்
எடுத்தகருமத்தை இனிதே முடித்திடும் தீரன்
குறைவிலா முயற்சிக்கு குமிழமுனை சிறீரஞ்சன்
சள்ளிலும் சளைப்பதில்லை கல்வியிலும் களைப்பதில்லை
கண்ணியம் மிக்க கடமைவீரன் கனகநாயகம்
கட்டுப்பாட்டிற்கு இவனிடமில்லை தட்டுப்பாடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடிதுயர்ந்த நன்நெஞ்சம் கொண்ட தயாளினி
நிலைமாறும் மாந்தரிடை நிழல்தரும் குணவதி
பிறர்க்குதவி செய்து வாழும் நங்கை நித்தியகௌரி
பிள்ளைக்குரல், பிஞ்சு உள்ளமொடு பேசும் சிவசாந்தினி
அழகிய கூந்தலை சிதிலமாக்கிய சித்திரா
அவள் கூட வரும் அடுத்தவள் தான் கலைச்செல்வி.
நால்வர் தயவில் தானே நாங்கள் விலங்கியலில்......!

கண்டி றோட் தந்த கட்டான காளை முரளி
முடிவுகள் எடுப்பதில் முதன்மையானவன் — ஆனால்
சுவர்களைக் கட்டாமல் பாலத்தைக் கட்டுகிறான் — வாழ்க.
நட்புக்கு இலக்கணமாய் நயம்பயக்கும் பிராங்
வழாகம் தானே இவனது வாழிடம்!
சின்ன இடையவள், செல்லமாய் பேசும் தனுசினி
இவர்களை எல்லாம் எவ்வாறு மறக்கலாம்!

இணுவில்கீதா கல்வியில்தான் கவனம்
இடையிடையே கதையில் காரம் — என்றாலும் இனியவளே!
உரும்புராய் தந்த அறிஞன் எம் சுகந்தன்
சமயத்தில் சறுக்காவிட்டால் செம்மனச் செம்மல்.
சாலையிலே காய்ந்தாலும் சகுனமேதை வாகீசன்
பிழைக்கத் தெரிந்த பெரும் மேதை.

முல்லை நகர் தந்த முத்துப் பல்லழகி யோகா — இவள்
அதட்டினால் ஆண்களே கொஞ்சம் அசந்திடுவர்
மகள் என்று நாங்கள் உரையாடும் திருமகள்,
கூடவரும் கூந்தலழகி ரஞ்சிதாதேவி
கிளிநொச்சிச் செம்மல் வாரிவழங்கும் வள்ளல்
வளாகமெங்கும் வண்டியில் வலம்வரும் குகநாதன்
இவர்களெல்லாம் இணைந்தால் எங்கும் கலகலப்பே!

இளவாலை தந்த இனியவள் தான் சாந்தினி
இலௌகீகம் பேசிட சரியான தோழி
கலகல என கதைக்க நல்ல கலாராணி
கலக்கமின்றிப்பழகிடும் கலங்கமற்ற பேதை
மனமறிந்து பழகுகின்ற மலர்போன்ற தியாகேசன்
குணவான், கொடையாளி, உலகறிந்தவன், உத்தமன்.
இவர்களைப் பெற்றது தான் நாம் செய்த பேறு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியங்கள் வரைவதையே உயிர் எனப் போற்றி
கல்வியையும் கணக்கெடுக்காத கலைஞிதான் வாசுகி
சாளிதனில் பவனிவரும் கலைவாணி
அளந்துதான் பேசுவாள் அறிவாளி
பிரிந்துணர்வுகொண்ட புதுமைப்பெண் தர்சிகா
விடுதலை எதுவென்று விளங்கிக் கொண்டவள்
இவர்கள் இருப்பதனால் வளாகமும் வளமாச்சு !

அரியாலை தந்த விழியழகி கௌசல்யா
அன்புடன் ஆதரிக்கும் அருங்குணங்களின் உறைவிடம்
மட்டுவில் தந்த மௌனியான இந்திரா
நேசமுடன் உரையாடும் நல்ல நேசராணி
தனிக்காட்டு ராணியாய்த் தான் திரியும் ரஜனி
சின்னவள் என்றாலும் சிறந்தவளே சிவானந்தினி
சேர்ந்தனரே எம்மோடு சிறப்புத்தர!

கனிவாகப் பேசிக் கவர்ந்திடும் காரிகை புஸ்பா
நடையோ தனி, அணியும் உடையோ மணி
கூடவரும் குணவதிதான் தெய்வசக்தி
நோர்வே சென்றுவிட்ட அன்பு வசந்தா
படியிறங்கிப்பின் தொடரும் எழுத்தாளன் தவராஜா
பாதியிலே பிரிந்து சென்ற எம் இனிய தவேந்திரா
பதவியொன்று பற்றிக்கொண்டான் பரவாயில்லை!
ஆலங்குழாய் தந்த அழகுதமிழ்க் கொஞ்சும் சிவபாலா
உண்மையை உரைப்பவன், ஒருபோதும் வெற்றியைத் தழுவாத
இவன் தலைவன்

வட்டுநகர்தந்த வார்த்தைகளில் வல்ல சிவயோகலிங்கம்
இந்தச் சாது மிரண்டால் ............ இவன் தளபதி
இளவாலைதந்த இளவல், பாடகன் மோகனதாஸ்
உயிர் காப்பான் தோழனென உதவிசெய்யும் குணமுடையோன்
இம் மூவரும் அணைந்துவிட்டால் மலையும் தூசு!

சுந்தரோடை தந்த கண்சிமிட்டும் மாலினி
கதையில் வல்ல கட்டுவன் கௌரிதேவி
கூடவரும் குலமகளே தெல்லி நகர்க் கீதா
குறைவற்ற மனதுக்கு சில்லாலை அனுரா
இந்தியனின் கைபிப்டியில் இரையான கிருபா
இத்தனைபேர் கொண்ட எம் இனிய குடும்பம்
பிரிகின்ற வேதனையில் ... ... ... ... ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments of

# Sri Pathmanatha Stores

**105, K. K. S. Road,**
**JAFFNA.**

Dial ; 22568 Res. 22428

With the Best Compliments

for the Best Photographing

# Sharmila Photo

**Pt-Pedro Road,**
**NALLUR.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை பயின்றேமடீ

## புகை

மாணவ சோதரர் மண்ணுள் மாண்ட
வானரர் சாகரந் தன்னுள் - போனவர்
விட்ட ஜீவனின் வேதனை சொன்னால்
பட்ட மரமும் அழும்

வளர்ந்து நிலையா கட்டட தனமும்
அளந்து முடியா நிலமும் - பிளந்து
உதிரும் பிணியும் தமிழின் மாணவன்
முதிரும் பாதைக்கு முடை

## நகை

ஏதாய்ப் பட்டம் எடுத்திட வந்து
போதாய்க் கற்றேம் பாடம் - தோதாய்
காயைப் போட்டுக் களித்திரா விட்டால்
மாயை யாகுமே மனு!

நூலக மண்டபம் பேருரை மஞ்சமும்
மேலகம் கல்வியை ஏற்றிட - சாலவும்
நல்லதோர் வேளையில் நாளையைத் தந்திடும்
சள்ளினில் மேவினுற் சதி

## தகை

புதிதாய் வந்தவர் பழகிப் படிந்திட
விதியாய் கொட்டிடும் வினைகள் – பொதியாய்
பாரினில் வாழும் காலமும் நிற்கும்
நேரினிற் காணும் நிலை

வாடகை மாலிகை தாரகை ஓர்சிலர்
கூடகை சேர்ந்திரு நாளில் - நூல்தகை
இல்கலை சான்றுகள் தேடியும் ஊற்றும்
பல்கலை பயின்றே மடீ!

கு. ஜெயகௌரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Compliments From

# SAKTHY STORES

Dealers in :

**SWEETS, TOFFES & BISCUITS**
**Whole, Retail Sales.**

310,A. HOSPITAL ROAD,
JAFFNA.

நல்வாழ்த்துக்கள்

மொத்தமாகவும்
சில்லறையாகவும்
அரிசிவகைகளைப்
பெற்றுக்கொள்ள

## குணரத்தினம் ஸ்ரோர்ஸ்

292, 294 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

நல்வாழ்த்துக்கள்


மொத்தமாகவும்
சில்லறையாகவும்
அரிசிவகைகளைப்
பெற்றுக்கொள்ள

## துஷா ஸ்ரோர்ஸ்

296, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருபா, நீதானே நெஞ்சில் நிரந்தரம்



## இராம கிருபாகரன்

படைப்போன் அளிப்பு
**14-08-1965**

படையினர் அழிப்பு
**12-10-1987**


ஓடி, ஆடி, ஒன்றாய்க் கூடி
ஒன்றரை ஆண்டுகள் நன்றாய்ப்பழகி
ஓகோ என்றிருந்த ஒருவனிங்கில்லை
ஓவென்ற அழுதிட ஒருவரன்றில்லை
காக்க வந்த அந்நியக் கரங்கள்
கழுத்தை நெரித்ததே கண்ட நிதர்சனம்
ஓராயிரம் உயிர்கள் வீணே பறந்தன
ஓலங்கள் தானே விஞ்சி நின்றன

உயர்ந்த தோற்றம் உவகை உள்ளம்
உதவும் சுபாபம் உறுதி நெஞ்சம்
கல்வியில் தாகம் கதைப்பதில் ஆர்வம்
கட்டுடல் காளை காவிய நாயகன்
நயினை தந்த நந்தா மணிவிளக்கு
நமது நெஞ்சில் நாளும் குடியிருப்பு
நிலையற்ற வாழ்க்கை நீர்மேலே எழுத்து
நினைவுகள் தானே நெஞ்சில் நிரந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருப்போம்



## செல்வி பவானி நல்லையா

மலர்வு :
**6-2-66**


உதிர்வு :
**26-6-89**

காலமெல்லாம் நோன்பிருந்த
கன்னித் தமிழ் தாயின்
கடுந்தவத்தால் வந்துதித்த
கண்மணியே — எம்பவானி
வந்தனையோ வளாக பூங்காவில்
வருக வருக என்றுன்னை
வரவழைத்த எம்மவர் குரல் ஓயுமுன் — நீ
வந்த இடம் மீண்டனையே — என்ன அவசரத்தில்
கருகுதடி உன் அன்னை உதரமடி
கதறி அழுகின்றோம் எம்மவர் தான் இங்கு
கலங்காமல் தர்பாரில் தலைநிமிர்ந்த நாயகியே
காத்திருப்போம் காலமெல்லாம் விடியலுக்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்டனேயோ?



பரஞ்சோதி காந்தன்

தொட்டிலில்
**29-05-1965**

புகையிரதப் பாதையில்
**10-06-1987**

எல்லாமே நேற்று முடிந்த கதை என நினைத்து
உனை மறக்க முடியவில்லை
காலம் பார்த்து அவன் கணக்கை முடித்தான்
ஏனென்று கேட்குமுன்னே கதவை அடைத்தான்
படைத்தவன் தானே பறித்தான் என்றால்
பாதியிலே ஏன் நம் நட்பை முறித்தான்
நீ அன்று அமைதியானாய் ஆனால் உன் இலட்சியமோ இன்று
புகையிரதப் பாதையில் நசிபட்டுக் கிடக்கிறது
பிறந்த மண்ணில் நடந்தவை மறந்து
நீ மறைந்த உலகம் எங்கு?
எதிர்காலக் கனவுகளை கல்லறையில் கவிதையாக்கி
சுடு காட்டில் சுகம் கண்டு
கூட்டைவிட்டு மாண்டனேயோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# For your life

I am life; which
Wills to live in the
Midst of life — which
Wills to live
For such a man
All life is Sacred — He
Tears no leaf from a tree;
Plucks no flower and takes care
Not to crush on insect
If in summer
He is working by lamp light
He prefers to keep the window
Shut and breaith a stuffy
Atmosphere rather than
See one insect after another
fall with scorched wings
On the table

**Mr. Suresh A. R. Adrianandam**
2nd Year bio

*A young woman was explaining to a friend why she had decided to marry one man rather than another.*

*"When I was with George", She said "I thought he was the cleverest person in the whole world."*

*"Then why didn't you choose him?" the puzzled friend asked.*

*Because whan I' am with Rohan I think I'am the cleverest Person in the whole world.*

*from* **Dhamayanthi**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வசந்தா பார்மஸி அன் ஸ்ரோர்ஸ்

280, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

எங்களிடம்
ஆங்கில மருந்துவகைகளையும்
பால்மா வகைகளையும்
பெற்றுக்கொள்ளலாம்



நல்வாழ்த்துக்கள்

ரொபி, பிஸ்கட், இனிப்பு
வகைகளுக்கு

## விஜேய ஸ்ரோஸ்

64, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



நல்வாழ்த்துக்கள்

ரொபி, பிஸ்கட், இனிப்பு
வகைகளுக்கு

## அனஸ் சுவீட் ஹவுஸ்

63, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.



அனைவருக்குமேற்ற

சகலவிதமான

பிடவை வகைகளுக்கு

## மீனாம்பிகை ஜவுளி மாளிகை

32, நவீன சந்தை,

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமகள் தேவை

சகலவிதமான திருமண வைபவங்களுக்கும் மணமக்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளவும் எம்மை நாடுங்கள்.

**ஜெயா ஏஜன்சி**
**No. 14 வவுனியா**

*(1) குடிவெறியற்ற படித்த மட்டுநகர் வாலிபர் ஒருவருக்கு, 26 - 26 – 86 உடலளவில் சகிப்புத்தன்மையுள்ள மணமகள் தேவை! மதுவைப்பற்றிப் பேசிக்கொண்டாலே போதையேறும் குணமுடைய இவர் மாட்டு வண்டிலை மட்டுமே சீதனமாக எதிர்பார்க்கிறார். யானைகள் உள்ள காட்டுப்பகுதியில் வசிக்கும் பெண்கள் விரும்பத் தக்கது. உடலளவுக்கும் உறுப்புக்களின் அளவுக்கும் சம்பந்தமில்லாத இவர் தோற்றம், குறித்த 26 – 26 - 86 பெண்களுக்கென்ற பிரமனால் படைக்கப்பட்டது. எனப் பெயரெடுத்தவர். எனினும் இவர் வதையினால் பாதிக்கப்பட்ட சகபாடிகளின் விருப்பத்திற்கு இணங் கவே திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்! விண்ணப்ப முடிவு திகதி 31 - 12 - 1999*

*பி.கு.: இவர் தன்னைத் திருமணம் செய்யும் பெண்களுக்கு மட்டுமே (பாதிக்கப்பட்டவர்கள் தவிர) தனது 3ம் காலைக் காட்டுவார்.*

பெயர்: இன்பராசா
இடம்: மட்டக்களப்பு
குச்சொழுங்கை

*(2) அழகான கறுத்த (ஸ்ரீராமணைப்போல்)* BSc *வாலிபருக்கு தலையில் மயிருள்ள அல்லது வலது குறைந்த மணமகள் தேவை! வெள்ளைநிற மணகள் விரும்பத்தக்கது. கட்டையாக இருந்தாலும் கவலையில்லை ஆனால் மனிதப் பெண்ணாக இருக்கவேண்டும். சீதன மாக ஆண் தரப்பிலிருந்து 2 பரப்பு தரிசுநிலம் வழங்கப்படும். பெண் தரப்பிலிருந்து எதிர்பார்க்கப்படமாட்டாது.*

*விண்ணப்ப முடிவுதிகதி : காலவரையற்றது.*

பெயர்: மகேந்திரன்
இடம்: பருத்தித்துறை
பனங்காணி

பி கு:- 2-ம் தாரம் விரும்பத்தக்கது

b

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) B Sc படித்து 9 வருட அனுபவமுள்ளவரும் O/L, A/L ஆகிய வற்றில் முறையே மூன்று மூன்று சான்றிதழ்களை வைத்திருப்பவரு மான கண்ணுடி அணிந்த வெள்ளை நிறமுள்ள கண்சிவந்த கட்டிழம் காளை ஒருவனுக்கு கறுப்பில்லாத குணமான சேரிப்புறத்து யுவதி தேவை. தயவுசெய்து படித்தவர்கள் யாரும் விண்ணப்பிக்க வேண் டாம். ஏனென்ருல் படித்தவர்களுடன் இவருக்கு 8 வருட அனு பவம் உண்டு. [இதுவும் இவருடைய விஷேட தகமையாகக் கருதப் படலாம்.] தகுந்த சீதனம் வழங்கப்படும். ஆனுல் தொடர்ச்சியாக 3 வருடம் இவருடன் வாழவேண்டுமென வலியுறுத்தப்படுவார்கள்·

விண்ணப்ப முடிவு திகதி:- இன்று

பெயர்:- முகுந்தன்
இடம்:- பருத்தித்துறை
முந்திரித்தோட்டம்

கறுப்பணிந்த

இருளின் குழந்தைகளே !

கல்லூரியிலிருந்து தெருவுக்கு

பிதுக்கப்பட்ட பிரஜைகளே !

'உங்களைக் கேள்விகேட்டவர்களிடம்

ஒன்றைக் கேளுங்கள்'

எங்களை ஏன்

வாழ்க்கையிலிருந்து

விரட்டியடித்தீர்கள் ?

—(இந்தியக் கவிஞர் ஒருவரின் பட்டமளிப்பு விழா பற்றிய கவிதையொன்றிலிருந்து...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

wish your Best Luck

to the final year students

from

**SUBHAS CREAM HOUSE**

**Hospital Road,**

**JAFFNA.**

சகலவிதமான

பாடசாலை உபகரணங்கள்

காரியாலய உபகரணங்கள்

பொலித்தீன் வகைகளுக்கு

**ஆசீர்வாதம் ஸ்ரோஸ்**

61, பெரியகடை,

ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல் வாழ்த்துக்கள் !

# கௌரி றேட் சென்ரர்

பாதணிகள், அழகுசாதனப்
பொருட்கள் வியாபாரிகள்

5, ஆஸ்பத்திரி வீதி,
நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

With the Best Compliments

from

**Siyanas Tailors**

176, Morden Market.

JAFFNA.

With the Best Compliments

Best photograpers

**RUBI PHOTO**

Stantly Rd.,

JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளாகத்துப் பசுமைகள்....!

இருள் மறந்த இரவு
ஒளிர மறுத்த பகல்
சோகம் படர்ந்த தேசம்
நடுவே...
இனம் புரியாத இன்னொரு சோகம்!
.....................
..... .. ......

முகவரிகளைத் தொலைத்துவிட்டு
முகமறியாதவர்களை இணைத்துவிட்ட
Set theory Analysis
புரிதலுக்குப் புடமிட்ட Vectospace
இன்றைக்கு...
Group theory எங்களை
வாழ்க்கை வசந்தத்திலிருந்து
தெருவுக்குத் துரத்துகிறது!
எங்கள்
இதயச்சுவடுகள் பதிக்கப்பட்ட
இந்த வளாகத்துப் பசுமைகள்
கண்ணீர்க் காட்டாறுகளை
உரமாக்கிக் கொள்ள
சுதந்திரமான சோகம்
எங்கள் நினைவுகளை
விசாரணை செய்கிறது!
ஆம்..!
Physicos நிரபராதிகள்
விசாரிக்கப் படுகிறார்கள்.

ஒழுக்கத்தின் ஒளிவிளக்கு திருநாதன்!
பெண்களிடம் பேசிப்பார்த்தால் புரியும்
கண்ணாலே பார்ப்பதெல்லாம் படிப்பானால்
பெண்மை கலகலக்க மறுக்குமோ — கலாவதி?
மண்ணிலே நடப்பதை மறந்து போன மனோராணி!
சளைக்காமல் சள்ளடிக்கும்
மலைக்கள்ளி தமயந்தி!
சிலையாயச் சிலவேளை சிரிக்கும்
சிறீமதி அறுவைத்தாய் ஜெயகௌரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளிவிபரப் புயலடிக்கும் இவர்கள் காட்டில்
கள்ளிருக்கும் மலராக ஆனைக்கோட்டை சுவர்ணலதா !
இதயத்தில் சேர்ந்து இரத்தத்தில் கரைந்துபோன
இவர்களை மறத்தல் எப்படி நடக்கும் ?

கற்றலும் விளையாடிக் களைத்தலும்
நிற்றலும் கூடவே தொழிலான — சித்திரன் !
நிலாவில் உலாவர அமைதியைத் தேடும் மங்களேஸ்வரன் !
கனவிலும் கற்றலையே காணும்
நினைவுகளில் மட்டும் நித்தியானந்தன் !
காதலர் தரகன் கெங்காதரன்
கடைசியில் ஆனான் தனிமரமாய் ?
காற்றுப் போல் இடையிடையே
களைத்த உடலுடன் வக்கிரம் நக்கீரன் !
கடைசிவரை பாட்டிசைக்கும் படித்தவாத்தி ஞானதாஸ் ;
இடையிலே இவர்களோடு இன்னொரு ஜீவன்
அமைதியின் அத்திவாரம் ரெமேஸ்ஷன்
அடியார்கள் சேர்ந்து விட்டால்
அப்பப்பா ! நாறிடுமே நம் வளாகம் !

வாழ்வாங்கு வாழ வளாகத்தில் தளமமைத்த மதியழகன்
வசந்த காலத்து மழைமேகம் வேலணை, பரமேஸ்வரன் !
நிசப்தம் நின்றுபோகும் வேளையில்
சப்தத்தைச் சவரம் செய்யும் கோடீஸ்வரன் !
சப்பிய வெற்றிலையைத் துப்பத்தினறும் ஞானேஸ்வரன் !
சாமான்ய மானதா இவர்களின் பிரிதல் !

உறவுகளை உல்லாசமாக்கிய
உடுவில் உத்தமி மைதிலி !
உருவத்தில் அல்ல உள்ளத்திலும்
திருடப்படாத தென்றல் சிவநிதி !
இருள் நீண்டு கூந்தலாய் இடைவரை ஆனதோ
ராதிகா எப்போது உன் libarary வாசம் முடியும் ?
பாதிவழியிலும் பாட்டிசைக்கும் பிரேமிளா !
வருவாளாயினும் வராதவளாய் சுமதி — இவள்
வஞ்சகமில்லா நெஞ்சினள் !
வளர்சியுற்ற 'சள்' — ஒரு தொழில்
இரசாயனத்திலா ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகந்தனிடம் உள்ளது பதில் ! — உங்கள்
நிகழ்வுப்பயணம் நினைவுப்பயணமாக
எங்கள் பிரிதல் உறுதியாகும் !

பாதியிலே நின்றுவிட்ட சின்னவள் புஷ்பராணி!
பயணத்தில் நிழலாகத் தொடர்ந்துவரும் பெரியவள் யமுனா!
பவித்திரமாய் வந்திறங்கும் தயாளினி
பத்திரம் உன்னவன் பார்த்துக்கொள் 4th Year இல்!
சித்திரமாய் சிவப்புச் சைக்கிளோடு
சிரித்தும் சிரிக்காமல் சேர்ந்துவிட்ட ஜெயந்தி!
சிங்கார நினைவுகளோடு ரீங்காரமிடும் சுபத்திரா!
வெளிநாட்டு இறக்குமதி (?) சந்திரிக்கா இவள்
உதட்டால் கதைபேசும் 'Miss' உடுப்பிட்டி!
உலகச் சுழலின் ஒவ்வோர் அசைவிலும்
உங்கள் நினைவுகள் எங்களை நெருடும்

சுத்தமாக ஆங்கிலம் பேசும்
சுதந்திர புருஷன் ராஜசூரியன் — இவன்
நினைவுகளை மௌனமாக்கி
நித்திரை கொள்வதில் முத்திரை பதித்தவன்!
சொர்க்கத்தில் வாழும் மிதவாதி
சொல்லப் போனால் தாடித்தியாகி சுபிஷ் சிவகுமார்

தொண்டு செய்து நல்லூரில் வாழும்
குண்டன் ஜெயக்குமார்
சென்ற இடமெல்லாம் சிரிப்பொலிகள்
குற்றமற்ற குளிர்காற்று தாவடி ஸ்கந்தா
எப்படி மறப்போம் இவர்களை?

மைதானத்துப் பனையா புத்தகத்துப் பேப்பரா — பரமலிங்கம்
வளரத்துடிக்கும் வளர்பிறை திருவரன்
அகப்பட்டவர்களை அக்காதங்கையாக்கும் C. C. தனஞ்சயன்
764 காதல் வண்டி சுமந்துவரும் — சங்கர் இவன்
பாலைவனத்தில் சோலைகாட்டிய பெருமகன்!
தலையைக் கழற்றிவைத்துவிட்டு வந்ததாக கூறும் — ஜெய்கணேஷ்
இவன் பேசுதல்
வெட்டிப் பேச்சானாலும் வெள்ளை மனம்!
வசந்தம் பாடும் குமரேசன் இவனோடு
இவனோடு இசைந்துபாட இன்னொரு தென்றல்
Reading எடுத்தபடி ஸ்கந்தா! — இவன்
Wording இல் அடிக்கொரு 'I Say'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறக்கும் போதே பேனுவோடு பிறந்த அஜித்!
படிக்கவென இணைந்துகொண்ட
பிறந்த குழந்தை அர்ஜுனு!
காற்றிலே முழங்கும் உங்கள்
கனவுக் குரல்கள் காலங்களால் அழிக்கப்படா

பௌதீகத் துறையின் பத்தினி (வண்ணக்கிளி) லலிதாம்பிகை!
கணிதத்தின் காரிகை வசந்தா
கற்கையை முறித்துவிட்டு காணுமல் போன மந்திகை உமா
கனவுகளே இல்லாத ரஜனி
கனரக வாகனம் போல் ரோந்து வரும் கீதா
இடையில் இல்லாமல் போன யோகராணி
விடுப்புக்கதை பேசும் ஸ்ரீகௌரி — இவள்
கொடுப்புப்பல் கழற்றியோர் ஏராளம்!

வசந்தமே வார்த்தெடுத்த வல்லை வசந்தா
சோராமல் திரியும் சுபாங்கி!
இவள் இளமையோடு
சேராமல் சேரும் மதிவதனி
தடுக்கி விழாமல் நடைபயிலும் — சிவநங்கை
உதட்டுச் சிரிப்பில் ஓரத்துக் கன்னம் இவள் சீதனம்!
உங்கள் சேர்க்கை உண்மையான தனியுலகு!

பாட்டிகளில் பலசாலி ஞானசேகர்
போட்டோ எடுத்தலும் போஸ்குடுத்தலுமாய்
போட்டோ ரவீந்திரன்!
போனுனே கனடாவிற்கு ரமணன்!
பொறின் பகிடிகளைப் பொறுக்கிவிடும் முகுந்தன் இவனுக்கு
கவுண்டமணியாகும் கற்பனே!
மைதானமே சரணம் என்று சாமிநாதன்
கேட்டுப்பார்த்தால் தெரியும் கேசவமூர்த்தி
கண்டுபிடிக்க முடியாத சுண்டிக்குளி 'Mod' உதயகுமார்
கண்களை மூடி கரங்கள் கோர்த்து
கால்கள் பதித்த நாட்களை எப்படி மறப்போம்!

ரோசமுள்ள கவரிமான் கலைமகள்!
பாசமோ படிப்பில் மட்டும் பங்கயற் செல்வி
அழுக்குகளே சோப்பு வேஷம் போட்டுக் கொண்டு
சுகாதாரம் பேசும் போது
பேசமறந்த பிரேம கலஷ்டா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சைக்கு மட்டும் வந்துபோகும் விமலேஸ்வரன்!
விருட்சமாய் வளர்ந்த கொடியிடையான் ஞானகரன்!
தருமன் போல பொறுமையாக உலவும் தருமசீலன்
படித்தல் பாதி உழைத்தல் பாதியென
களைத்தலில் வாழும் ஜெயந்தன்!
கற்றலுக்காய் Room மே கதியெனக் கிடக்கும்
கனவுத் தேவன் இளவாலை நரேந்திரன்;
மனத்தாலும் கள்ளமில்லா யோகராஜா
கணக்குத் திணைக்கள தலைமை வாத்தி ஸ்ரீதரன்!
கற்றல் கனத்தபோது Room மாறிய சிவலிங்கம்
உணர்வுகளை உள்வாங்கும் உங்களை
மறப்பது மனிதம் அல்லவே!

பாலசிங்கம் பாலர் மடத்தின்
மூன்றும் மாடியோடு முடிச்சுப் போட்டுக் கொண்டவர்கள்!
அன்பான அப்பா குகதாசன்!
அப்படியானல் பெரியப்பா அம்மான் கெங்காதரன்!
இனிய 'டடி' மாறன்
உள்ளபடியே மாமா ஜெயகுமார்
ராஜ்ய மற்ற ராஜ்குமார்
மௌன ராகமிசைக்கும்
இசையருவி உதயகுமார்!
எப்போதும் வியர்த்தபடி
கெட்டிக்காரன் வசந்தன்!
இரண்டாம் வருடத்தில் மேடையேறி
இப்போதும் பாட்டிசைக்கும் ஸ்ரீரங்கன்
எப்போதும் Active ஆக
எங்களின் தலைமை சூட்டி குலசிங்கம்
கால்வாளி யானலும் காரம் அதிகம்!
இவர்கள் பிரிதலின் சேதி
இதயத்தை இரும்பாலறைந்தது

சைப்பிரஸ் ஜெயிலின் சரிநிகர்வாசிகள்
சைலன்ட் சிறீபாலன்
வஞ்சகமற்ற பஞ்சலிங்கம்
இன்னும் அமர சோதி
இவன் இனியும் பாடுவானும்?
விதைத்த பனை விஜயகுமார்
முகிழ்ந்த இலக்கியகாரன் முரளி மனோகரன்

C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களோடு சிவராஜா
சிரித்தலே இவன் 'Trade Mark'
உயரப்பறந்து உல்லாசித்திருந்த இவர்கள்
நினைவுச் சுமைகள் நெருஞ்சிகளல்ல!
நிம்மதியின் சின்னங்கள்!

பட்டமெடுக்கப்பரிதவிக்கும் மகேந்திரன்
மட்டக்களப்பு 'மவன்'
கற்பிழந்த இன்பன் — இவன்
கால்களோ மூன்று!
காணுமல் இருப்பான் — ஆனல்
கற்றுமுடிக்கும் 'Rombo' முருகையன்!
அகிம்சைப் போராளி கிழைக்காற்று தேவராஜா
அவ்வப்போ இவனோடு செல்வகுமார்
இரசாயனத்துக் கென இணைந்து கொண்டு
இரண்டொரு Bios ரோடு கூடுகட்டிய பருத்தி பரமேஸ்வரன்!

வாழையின் வனப்புடன் வந்து செல்லும்
வட்டுக்கோட்டை அழகி ரவீந்திரன்
வாடைக்காற்று வீசும்போது
விரிவுரையை நினைத்து வரும் வாத்தி குகன்
வீறுகொண்ட நடையுடன் வரும்
சியா-உல்-ஹக்- திருக்குமரன்
மறத்தல் என்பதை மறந்தாலும்
மறக்குதல் முடியுமா இவர்களை

நியாயத்தின் நிழலோடு
நிம்மதிக்கு விண்ணப்பித்த பாபுஜி புவனேந்திரன்
சோப்புக் கணக்குப் புரியாத
கணிதத்துறைப் போராளி நாவலன்
கனக்கமறந்து கணக்கு நிறைந்த
இன்னொரு தலை காண்டீபன் —இவர்கள்
எங்கள் நெஞ்சு நிறைந்த நினைவலைகள்
மீதியை முடிக்க பாதியிலே வந்த லட்சுமண்!
அநீதி நிமிர்ந்து நின்ற போது
குனிந்து நடக்கும் தவராணி
நெஞ்சு நிறைந்த
பின்வரிசைக் கதாநாயகி தங்கராணி
சும்மாவே சிரிக்கும் சுன்னுகம் உமா
புதுமைப் பெண் பிரேமாதேவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாடும் அழகுசாதனம் (V. V. T) சுவர்ணலதா
ஓ ......... இன்னும்
கண்ணாடி போட்ட கனவுக்கன்னி சாந்தி
இவர்கள்
உணர்வுகளோடு ஒட்டிக் கொண்டவர்கள்
உரிமையைப் பங்கு போட்டவர்கள்

ஆம் ......... !
நாங்கள் இணைந்திருந்த போது
பூமி எங்கள் காலடிக்குக் கீழே என்று
புளகாங்கித மடைந்தோம் !
இப்போ பிரியும் போது
வானம் எங்கள் தலைக்கு மேலே என்று
வருத்தப் படுகிறோம் !
எங்களை
வருடிக் கொடுத்த வளாகத்துத் தென்றல்
புதிய பூமிக்கு முகவரியிடும்
இந்த நம்பிக்கைக் கீற்றைப்
பற்றிக் கொண்டு
நாளையை நோக்குகிறோம் !

# Heard In A Bar

"Last week I saw a pretty girl wanting to know whether she is married or not I asked excuse me madam, but are you married? To this simple question. She answered with everything except her mouth. Later I learned that she has 2 children"

"This week I saw another beautyful girl. This time keeping the last week's incident in mind I asked "excuse me madam, but do you have anv children? Then all hell broka out. This time I learned that she is not married"

"Nowadays I don't even look at pretty girls"

**Murali**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Laugh it off

I am sure you can imagine
It is simple as can be
The place is near
The players are he & she

She whispered 'will it hurt me'?
'Of course not; answered he
'It is a very simple process,
You can rely on me;

She said 'I am frightened'
'I have not had it once before;
He started to coax her,
it would not hurt at all

She finally consented
And he started it on her,
And half an hour later
Neither spoke a word

Its getting rather painfull,
The tears were in her eyes
Its hurting quite a bit now
It must be quite a size.

Now calm yourself my dear, he said
His face betrayed his grin
Jusn open slightly winder
And let me there get in.
Its coming now, he told her
I know, she said in bliss,
'Its all over now' she murmured'
Thank God you pulled it out.

Now, if you read it carefully,
Its a dental surgeon you will find.
And not what you were thinking
Its Just your dirty mind,

—From Dhamayanthi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "Taking Advantage"

The village farmer boy was going back home after a hard day's work at the farm carrying a spade, a tub and a hen and pulling a goat. A neighbourhood girl who had happened to go to town joined him on the way. As it slowly started getting dark the girl said "you know I am a bit frightened to walk alone with you" when asked why she replied "well you could take advantage of me. The boy laughed and said with all the things he was carrying how it was possible. Raplied the girl, "You could put the hen into the tub, turn it over, dig the spade into the ground and tie the goat to it and then take advantage of me.

* * *

The doctor was talking to an extreamly pretty girl when his wife walked into his dispensary and found it very annoying. After the girl had left she asked her husband what they were talking so intimately. Replied the docter that it was a professional talk. Shot back the wife', "exactly, I would like to know on who's profession it was."

* * *

In an island lived a cat and a cock both fond of eating fish. The cock was able to wade a certain amount of distance in the water because of it's longer legs, catch and eat fish and retnrn satisfied with it's meal. But whenever the cat tried to do the same, it usually got rolled over by the waves, got throughly wet and ends up with a cold. For every satisfied cock their is a wer pussy.

* * *

Two friends went to a prostitute, The first went in and came out saying "Man, she is much better than my wife" The second went in and came out and said "yeh, she is"

* * *

The best secy is the one who doesn't miss her periods.

**Romesh**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (சே)சட்டைகள்

ஒன்றைப் போட்டுவிட்டு
அது அலுத்ததும்
காரணங்காட்டி கழற்றிவிட்டு
வேறொன்று போடுபவர்கள்
போட்டுப் பார்த்து ஏனோ கழற்றிவிட்டு
மீண்டும் அதையே போடுபவர்கள்

போட்டுக் கழற்றியபின் 'Second hand' ஆகப்
போட நினைப்பவர்கள்;
இரவலைக் கூடப் போட நினைத்தவர்கள்

பொருத்தமென நினைத்து
ஒன்றையே நிரந்தரமா(ய்)?
போட்டிருப்பவர்கள்
களற்று விட்டால் விட
எட்டா விலையிலுள்ள ஒன்றிற்காய்
கொட்டாவி விடுபவர்கள்

போடுவதற்கு ஆசையிருந்தும்
கிடைக்காததனால்
பேசாதிருப்பவர்கள்

வெளியேறிய பின்
பார்த்து தேர்ந்து
போட இருப்பவர்கள்
களற்ற போகிறார்கள்
எத்தனை? எத்தனை?
எம்மிடை எத்தனை

The future nation builders
Your's is a heavy duty
To make them live in reacity
Teace them to have simplicity
Guide them to respect humanity

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்குள்ளே......

—கெங்காதரன்

நல்லவர்கள் இட்ட நாற்றுமேடையிலே
புல்லும் முளைக்கும் தான் — அது நாற்று ஆகாது
என்பது போல்
பல்கலையும் கற்க வந்தீர்கள் — உண்மை
ஆனால்,
சில மேலான கலைகளும் கற்றீர்கள் — அது மேன்மை
வளாகச்சகோதரர்களுக்கு
அடுக்காய்த்தருகின்றோம்
புகைப்பிடித்தும் மதுக்குடித்தும்
பணத்தைக் கரியாக்கி — மரநிழலில்
கால்மேல் கால்போட்டு — மடிமேல்
தலைவைத்து கூச்சலிடும் நண்பர்களும்
இங்குண்டு.
சாலையோரம் வண்டியுழக்கி
பின்தொடர்ந்த நண்பர்கள்
நல்லூர்க்கந்தனின் விழாக் காண வந்த சோதரிகளை
சோதித்து — விட்டீர்களா ?
நெரிசல் எங்கு என்று எதிர்பார்த்து — திரியும்
நண்பர்களும் இங்குண்டு,
சொற்ப தூரம் இருந்து வரும் அன்பர்கள்
சூடு சுரனை இல்லாமல் பேருந்தில்
சுரண்டலுமா ?
தோளிலே பைமாட்டி மறுகையால் — தோள் தடவும்
நண்பர்களும் இங்குண்டு.
பாதையிலே செல்கின்ற பாவையரைப் பார்த்து
பல்லிழித்தும் சொல்லெறிந்தும் நிற்கும்
நண்பர்களும் — இங்குண்டு
ஆடைகளை மாற்றுவது போல் — பாவையரை
ஆசைவார்த்தை கூறி — மயக்கும்
நண்பர்களும் இங்குண்டு.
படிக்கவென வந்து வேலைக்கு வந்திரிக்கும் — பெண்களை
வெளிநாடு வரை அனுப்பும்
நண்பர்களும் இங்குண்டு
வாந்தி வர விடாது வளாகத்து நற்பெயரைக் காத்த
காதலர்களும் இங்குண்டு.
படித்துவிட்டு வந்து விலாசம் காட்டும்
நண்பர்களும் இங்குண்டு.
வசதிகளை எதிர்பார்த்து அடிக்கடி — Roomமாறும்
நண்பர்களும் இங்குண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஃபோவேடான காய்”

